**குருவிட்ட பிரதேச சபை**

**இரத்தினபுரி மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2015 மார்ச் 27 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2014 மார்ச் 31 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 ஆகஸ்ட் 10 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து, குருவிட்ட பிரதேச சபையின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) 108 செலவின விடயங்களுக்கு உரித்தாக மீளாய்வாண்டின் செலவினம் ரூபா 238,833 தொகையான போதிலும் நிதிக்கூற்றுக்களில் கடன்கொடுத்தோர் மீதியான ரூபா 130,108 தொகை மாத்திரம் கணக்கீடு செய்யப்பட்ட காரணத்தால் ஆண்டிற்கான செலவினத் தொகையான ரூபா 108,725 குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 203 செலவின விடயங்களுக்கு உரித்தாக மீளாய்வாண்டின் செலவினம் ரூபா 1,363,334 தொகையாக இருக்க வேண்டிய போதிலும் நிதிக்கூற்றுக்களில் அம் மீதி ரூபா 1,644,741 தொகையாக கணக்கீடு செய்யப்பட்ட காரணத்தால் ஆண்டிற்கான செலவினம் ரூபா 281,407 அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டிற்குரிய ரூபா 47,500 தொகையான கடன்கொடுத்தோருக்காக ஆண்டின் இறுதியில் நிதிக்கூற்றுக்களின் மூலம் சீராக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஈ) முன்னைய ஆண்டின் போது கடன்கொடுத்தோருக்காகக் கொடுப்பனவு மேற்கொள்ளப்படுகையில் ரூபா 1,281,977 தொகையான மிகை ஏற்பாடுகள் தொடர்பாக தேவையான சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(உ) மீளாய்வாண்டின் போது நாட்குறிப்புகளின் மூலம் பற்றாக்குறை.். மிகையான பட்டியலிடல்கள் திரண்ட நிதியத்திற்குச் சீராக்கப்படுகையில் ரூபா 105,309 தொகை அதிகமாகச் சீராக்கப்பட்டிருந்தது.

**1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்**

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 08 கணக்கு விடயங்களுக்குரித்தாக 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களின் படியான மீதிகளுக்கும் பட்டோலைகளின் படியான மீதிகளுக்கும் இடையேயான வேறுபாடு ரூபா 63,022,715 ஆகக் காணப்பட்டது.

(ஆ) செலவினப் பேரேட்டிற்கும் ஒன்றிணைந்த செலவினப் பொழிப்பிற்கும் இடையே 02 செலவின விடயங்களுக்குரிய ரூபா 22,823,774 தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

### 1.3.3 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடன் இணக்கமின்மை

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்களின் ஏற்பாடுகள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் |
| --- | --- |
| (அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச்சட்டம் 132 (ஏ) பிரிவு | மக்கள் வரவேற்பு அல்லது பொது முக்கிய நடவடிக்கை அல்லது சம்பவம் அல்லது சந்தர்ப்பம் தொடர்பாக அல்லது செலவினத்திற்காக ஒரு வருடத்திற்கு ரூபா 1,000 இற்கு மேற்படும் செலவினத்திற்காக அமைச்சரின் ஓர் கடிதத்தின் மூலம் முன்னங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய போதிலும் இதற்கு முரணாக 08 சந்தர்ப்பங்களின் போது ரூபா 96,767 கூட்டுத்தொகையான செலவினம் ஏற்கப்பட்டிருந்தது. |
| (ஆ) இலங்கைக் குடியரசின் நிதிப் பிரமாணம் நிதிப் பிரமாணம் 371(2) | மீளாய்வாண்டின் போது கல்விச் சுற்றுலாவிற்காக வழங்கப்பட்ட ரூபா 200,000 தொகையான முற்பணத் தொகை கணக்காய்வுப் பரிசோதனைச் சந்தர்ப்பமான 2015 ஏப்ரல் மாதம் வரையிலும் தீர்க்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) இலங்கைக் குடியரசின் 2005 யூன் | சபைக் கூட்டத்தில் கலந்து கொள்ளாத ஓர் உறுப்பினருக்காக 05 சந்தர்ப்பங்களில் ரூபா |

| | |
|---|---|
| 08 ஆம் திகதிய 1396/18 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானி அறிவித்தல் | 25,000 தொகை உறுப்பினர் கொடுப்பனவாகச் செலுத்தப்பட்டிருந்தது. |
| (ஈ) 2006 குடியரசின் கொள்வனவு வழிகாட்டிக் கோவை 2.8.4 மற்றும் 8.12.3 | முன்பள்ளிக்காகப் பகிர்ந்தளிக்கப்படுவதற்காக ரூபா 597,920 பெறுமதியான மின் உபகரணம், தளபாடங்கள் மற்றும் விளையாட்டு உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் இது தொடர்பாக தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு ஒன்றின் பரிந்துரை பெற்றுக்கொள்ளப்பட்டிராததுடன் குறித்த மாதிரிக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டமைக்கு குறித்த உத்தியோகத்தரின் ஓர் உறுதிப்படுத்தலும் இருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் வருமானத்தை விஞ்சிய மீண்டுவரும் செலவு ரூபா 17,172,231 தொகையாக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 5,451,340 ஆக இருந்தது.

### 2.3 வருமான நிருவாகம்

#### 2.3.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டிற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளபடியானது | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| | (000) | (000) | (000) |
| வீதவரியும் வரியும் | 2,084 | 1,751 | 4,320 |
| வாடகை | 5,261 | 5,011 | 5,710 |
| அனுமதிப்பத்திரக் கட்டணம் | 1,271 | 1,625 | - |
| ஏனைய வருமானம் | 8,746 | 26,533 | 3,881 |

### 2.2.2 வருமானச் சேகரிப்பிலான செயலாற்றல்

மீளாய்வாண்டின் மதிப்பிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்படட வருமானத்துடன் ஒப்பிடப்படுகையில் வீதவரியும் வரியும், அனுமதிப்பத்திரம் மற்றும் ஏனைய வருமானங்களின் மதிப்பிடப்பட்ட வருமானத்தைப் பார்க்கிலும் சேகரிக்கப்பட்ட வருமானத்தில் முறையே 46 சதவீத, 58 சதவீத, 36 சதவீத குறைவு காணப்பட்டது.

### 2.2.3 வாடகை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) குருவிட்ட நகரின் புதிய சந்தையின் 36 கடைகளில் 08 கடைகளுக்கு உரித்தாக மீளாய்வாண்டின் இறுதியில் 01 மாதம் முதல் 05 ஆண்டுகள் வரையான நிலுவைத் தொகையான ரூபா 1,351,500 வாடகையையும் இதற்கு உரித்தான மிகைக் கட்டணமான ரூபா 3,621,500 தொகையான பணத்தையும் அறவிடுவதற்கு சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) 07 கடைகளில் 04 வருடங்களுக்கு மேலாக அறவிடப்பட வேண்டியிருந்த வாடகைத் தொகை ரூபா 1,350,000

தொகையானதுடன் இது அறவிடப்பட வேண்டிய மொத்த நிலுவையில் 97 சதவீதமாகும். இதில் ஒரு நபருக்கு உரித்தான மூன்று கடைகளிலிருந்து அறவிடப்பட வேண்டிய தொகை ரூபா 696,000 ஆன கூடுதலான தொகையைக் கொண்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. இரு கடைகளிலிருந்து அறவிடப்பட வேண்டிய தொகை தொடர்பில் 2010 நவம்பர் முதல் அமுலாகும் வகையில் மாதாந்த வாடகை ரூபா 1,500 படி திருத்தப்பட்டிருந்தது.

(இ) தற்காலிக கடைகளில் 01 ஆண்டிற்கு மேலான காலமாக நிலுவை வாடகை நிலவும் கடைகளின் எண்ணிக்கை 03 ஆகக் காணப்பட்டதுடன் இதில் அறவிடப்பட வேண்டிய தொகை மிகைக் கட்டணமும் அடங்கலாக ரூபா 158,190 ஆகக் காணப்பட்டது.

(ஈ) பிரதான மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் படி, புதிய கட்டிடத்தின் கடைகளுக்காக மூலப் பணம் மற்றும் கட்டணம் திருத்தப்பட்டிருந்ததுடன் கீழ் மாடியில் 07 கடைகளுக்காக கணக்காய்வுப் பரிசோதனைச் சந்தர்ப்பமான 2015 ஏப்ரல் மாதம் வரையிலும் ரூபா 6,343,861 தொகையான மூலப் பணம் அறவிடப்பட்டிருக்கவில்லை. ஆக் கடைகளுக்காக மூலப் பணம் மற்றும் கட்டணத்தைத் திருத்தியதை அடுத்து அம் மூலப் பணத்தைக் குறைப்பதற்காக பிரதான அமைச்சின் அங்கீகாரத்திற்குச் சமர்ப்பித்திருந்ததுடன் குறித்த அங்கீகாரம் பெறப்படும் வரை மூலப் பணத்தில் ஒரு பகுதி (1∴2) அறவிடப்படுவதற்கும், அங்கீகாரம் பெறப்படாவிடில் எஞ்சிய தொகை மதிப்பீட்டு அறிக்கையின் படி செலுத்தப்படுவதற்கும் 2014 நவம்பர் 18 ஆம் திகதி சபை தீர்மான இல. 6.2.1 இன் மூலம் தீர்மானம் எடுக்கப்பட்டிருந்த போதிலும் அக் கட்டளை கணக்காய்வுப் பரிசோதனைச் சந்தர்ப்பமான 2015 ஏப்ரல் மாதம் வரையிலும் செயற்பட்டிருக்கவில்லை.

### 2.2.4 பிரசார அறிவித்தல் கட்டணம்

---

மீளாய்வாண்டின் போது சபை அதிகாரப் பிரதேசத்தில் நிலையான 19 அறிவித்தல் பலகைகள் மாத்திரம் இனங்காணப்பட்டிருந்ததுடன் சுவர்களையும் மதில்களையும் பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்ட பிரசார விளம்பரங்கள், துணிகளின் மூலம் மேற்கொள்ளப்பட்ட அறிவித்தல்கள், டிஜிடல் அச்சீட்டு அறிவித்தல்கள் ஆகிய பாரிய அறிவித்தல்கள் நிலவியமை கணக்காய்வின்

போது அவதானிக்கப்பட்டதுடன் அவை இனங்காணப்பட்டு வர்த்தமானி அறிவித்தல்களின் பிரகாரம் கட்டணம் அறவிடப்படுவதற்கு சபை நடவடிக்கை எடுக்கப்பட்டிராத காரணத்தால் பாரிய வருமானம் சபைக்குக் கிடைக்கப்பெறாது போயிற்று. 2013 ஆம் ஆண்டின் போது அறவிடப்பட்டிருந்த அறிவித்தல்கள் 2014 ஆம் ஆண்டின் போது அகற்றப்பட்டிருந்ததா என்பது குறித்து இனங்காணப்பட்டிராததுடன் அவ்வாறு நிலவியதெனில் இதற்கான கட்டணத்தை அறவிடுவது தொடர்பாக சபை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.5 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணங்கள்

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டிற்காக சபைக்குக் கிடைக்கப்பெற வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணங்கள் தொடர்பாகக் கண்காணிப்பு மேற்கொள்ளப்பட்டு குறித்த பதிவேடு நாளதுவரையாக்கப்பட்டு சபைக்குக் கிடைக்கப்பெற வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணங்கள் தொடர்பாகக் கண்காணிக்கப்பட்டு குறித்த பதிவேடு நாளதுவரையாக்கப்பட்டிராததுடன் மாகாண வருமானதட திணைக்களத்தால் சேகரிக்கப்பட்டிருந்த வருமானம் மாத்திரம் சபைக்குக் கிடைக்கப்பெற்ற வருமானமாக பதிவுசெய்யப்பட்டிருந்தது.

(ஆ) மாகாண வருமான ஆணையாளரின் 2014 ஆகஸ்ட் 15 ஆம் 2014 நவம்பர் 30 ஆம் திகதிய 27(VII) ஆம் இலக்க கடிதத்தின் மூலம் 2013 ஏப்ரல் முதல் 2014 மார்ச் வரையான காலத்திற்கு உரித்தான பிரதேச சபைக்காகக் கிடைக்கப்பெற்றிருந்த எனினும் போதிய உறுதிப்படுத்தல் கிடைக்கப்பெற்றிராத காரணத்தால் சபைக்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்த ரூபா 178,450 தொகையான முத்திரைக் கட்டணத்தை இனங்காண்பதற்கு சபை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

---

தனியார் நிறுவகம் ஒன்றினால் அபிவிருத்தி செய்யப்பட்ட தாய்லாந்தின் 05 நாள் வெளிநாட்டுப் பயணம் மற்றும் இந்தியாவில் நடாத்தப்பட்ட 09 ஆவது இளைஞர் மாநாட்டிற்காக பிரதேச சபையின் உறுப்பினர்களும்

செயலாளர்களும் கலந்துகொண்டிருந்ததுடன் இதற்காகக் கலந்துகொண்டிருந்தவர்களுக்காக ரூபா 1,411,800 தொகையான பணம் தனியார் நிறுவகத்திற்கு சபை நிதியத்தால் செலுத்தப்பட்டிருந்தது. அச் செலவினத்தை ஏற்பதற்காக விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அங்கீகாரம் பெறப்பட்டிருந்தது.

மேற்குறித்த சுற்றுலாத் தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) உள்ளூராட்சி மற்றும் மாகாண சபை அமைச்சுச் செயலாளரின் 2010 செப்தெம்பர் 09 ஆம் திகதிய PL/07/01/05/26 ஆம் இலக்க கடிதத்தின் படி உள்ளூராட்சி நிறுவகத் தலைவர் அல்லது பிரதித் தலைவர் அல்லது உறுப்பினர் வெளிநாட்டுப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்திற்காக தேர்ந்தெடுக்கப்பட்டால் குறித்த அமைப்பு அல்லது வெளிறாட்டு அரசு அல்லது வெளிநாட்டு நிறுவகங்கள் இதற்காகச் செலவிடும் சகல செலவினங்களையும் வசதிகளையும் ஏற்க வேண்டிய போதிலும் அச் சுற்றறிக்கை ஏற்பாடுகளைக் கருத்திற்கொள்ளாது மேற்குறித்த கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

(ஆ) வெளிநாட்டிற்குச் செல்ல முன்னர் லீவு அங்கீகரிக்கப்பட வேண்டிய போதிலும் 2014 திசெம்பர் 24 ஆம் திகதிய உள்ளூராட்சி ஆணையாளரின் CLG/9/6/1 ஆம் இலக்க கடிதத்தின் படி, தாய்லாந்து சுற்றுலாவிற்காக வெளிநாட்டிற்குச் செல்ல வேண்டிய உறுப்பினர்கள் இருவருக்காக வெளிநாட்டு பயண லீவு அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) தாய்லாந்துப் பயணத்தில் கலந்துகொண்டவர்களுக்காக வழங்கப்பட்டிருந்த ரூபா 516,750 கூட்டுத்தொகையான முற்பணம் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) வெளிநாட்டுப் பயிற்சியின் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட அறிவை உள்நாட்டில் பயன்படுத்தும் விதம் குறித்த அறிக்கை பயிற்சி முடிவுற்று ஒரு மாதத்திற்குள் வழங்கப்பட வேண்டிய போதிலும், இந்திய இளைஞர் மாநாட்டில் கலந்துகொண்ட உறுப்பினர்கள் சுற்றுலா முடிவுற்று 08 மாதங்கள் கடந்திருந்த போதிலும் அத்தகைய ஓர் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.2 தெரு விளக்குகள் பொருத்தப்படல்

தெரு விளக்குகள் தேவைப்பட்டவாறு இனங்காணப்பட்டு தொழில்நுட்ப உத்தியோகத்தர்களின் முன்னங்கீகாரமின்றி ரூபா 994,310 பெறுமதியான தெரு விளக்குகள் மற்றும் மின்குமிழ்கள் 2014 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. மேற்குறித்த கொள்வனவுகள் தொடர்பாக 2006 கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 2.8.4 ஆம் 8.12.3 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிராததுடன் இத் தெரு விளக்குகள் மற்றும் குமிழ்களைப் பொருத்துதல் மற்றும் அகற்றுதல் தொடர்பாக குறித்த வகையில் இனங்காணப்படக் கூடிய வகையில் அறிக்கைகளைப் பேணியிருக்கவில்லை. மின்சக்தி மற்றும் மின்வலு அமைச்சுச் செயலாளரின் 2010 ஆகஸ்ட் 17 ஆம் திகதிய சுற்றறிக்கையின் மூலம் தெருக்களை ஒளியூட்டுவதற்கான அறிவுறுத்தல்கள் தொடர்பாக கருத்திற்கொள்ளப்படாது தெருக்களை ஒளிரூட்டுவது செயற்படுவதுடன் தெரு விளக்குகள் பொருத்தப்படுவதற்காக இலங்கை மின்சார சபையுடன் ஏற்படுத்தப்பட்ட உடன்பாடும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.3 செயற்பாட்டு திறமையீனங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2011 ஆம் 2012 ஆம் ஆண்டுகளில் முன்கொண்டுவரப்பட்ட ரூபா 3,986,846 தொகையான கடன்கொடுத்தோர் மீதி கணக்காய்வுத் தினம் வரையிலும் தீர்க்கப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சபை எல்லைக்குள் உள்ள மயானத்திலி 42 மயானங்கள் மாத்திரம் இனங்காணப்பட்டிருந்ததுடன் இவற்றில் 06 மயானங்கள் மாத்திரம் பொறுப்பேற்கப்பட்டிருந்தன. ஏனையவை அளவீட்டு நடவடிக்கைகளை மேற்கொண்டு சபைக்கு முறையாகப் பொறுப்பேற்கப்பட்டு பதியப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) உள்ளூராட்சி நிறுவகங்களில் கழிவு முகாமைத்துவத்தை மேம்படுத்துவதற்காக கழிவை ஒதுக்கிச் சேகரிக்கும் தேசிய நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ், 2014 யூலை 23 ஆம் திகதி உள்ளூராட்சி

திணைக்களத்தினால் சபைக்குக் கிடைக்கப்பெற்றிருந்த 112 கழிவுத் தொட்டிகளால் கணக்காய்வுப் பரிசோதனைச் சந்தர்ப்பமான 2015 யூன் மாதம் வரையிலும் 49 பிளாஸ்டிக் கழிவுத் தொட்டிகள் பகிர்ந்தளிக்கப்படாது களஞ்சியத்தில் வைத்துக்கொள்ளப்பட்டிருந்தது.

(உ) சபையிடம் உள்ள நாமல்தெனிய ஓய்வு விடுதி 2010 சனவரி 01 ஆம் திகதி முதல் 2014 திசெம்பர் 31 ஆம் திகதி வரை ஐந்தாண்டு கால எல்லைக்கு நாராஹென்பிட இலங்கை போக்குவரத்துச் சபைக்கு வாடகைக்கு வழங்கப்பட்டிருந்தது. வாடகைக் காலம் முடிவுற்ற காரணத்தால் அவ் ஓய்வு விடுதி 2014 திசெம்பர் 02 ஆம் திகதி மீள ஒப்படைக்கப்பட்டிருந்ததுடன், தளபாடங்கள், பொருத்துனர் மற்றும் மின் உபகரண உடன்படிக்கையின் பிரகாரம் வாடகைக்கு வழங்கப்பட்டிருந்த பொருட்கள் மீள ஒப்படைக்கப்பட்டிருக்கவில்லை.

## 4. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு
(இ) வருமான நிருவாகம்
(ஈ) சொத்துக்கள் முகாமைத்துவம்